சுற்றறிக்கை இலக்கம்:- LAE/2025- 41

TR - 04

மிக முக்கியம்

எனது இலக்கம்:R/LAE/2025/CIR
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை
2025.03.31

அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும்
பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு,

**உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 2025.05.06**
**தபால் மற்றும் பொலிஸ் திணைக்களங்களுக்கு வாகனங்களைப் பெற்றுக் கொடுத்தல்**

❖ **அஞ்சல் திணைக்களம்**

மேற்குறித்த தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகத்திற்காக தபால் திணைக்களத்திடம் போதியளவு வாகனங்கள் இல்லாதிருப்பதன் காரணமாக, குறித்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு சில அரசாங்க வாகனங்களைப் பெற்றுத் தருமாறு உங்களிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தால், உங்கள் மாவட்டத்திலிருந்து ஒரு சில அரச வாகனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு தயவுசெய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். அவ்வாறு வழங்கப்படும் **வாகனங்களுக்கான எரிபொருள் செலவுகள் அஞ்சல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் அவ்வாகனங்களின் சாரதிகளுக்கான மேலதிக நேரப் படி மற்றும் இணைந்த படி போன்ற கொடுப்பனவுகள் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.** மேற்குறிப்பிடப்பட்ட தேர்தலுடன் தொடர்பாக அஞ்சல் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ **பொலீஸ் திணைக்களம்**

02. உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின்போது பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பொலிஸ் திணைக்களத்திற்கும் அதிக எண்ணிக்கையான வாகனங்கள் அவசியமாக இருப்பதனால், பொலீசாரும் அரச வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் கோரிக்கை விடுப்பதற்கு இடமுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்களுடைய மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக போதியளவு வாகனங்கள் இருந்தால் மாத்திரம் ஒரு சில அரச வாகனங்களை பொலீஸ் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக் கொடுக்கப்படும் வாகனங்களை தேர்தல் முடிவடைந்து 03 தினங்களுக்குள் அந்த நிறுவனங்களுக்கு மீளக் கையளித்தல் வேண்டுமென அவர்களை அறிவுறுத்துதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் **வாகனங்களுக்கான எரிபொருள் செலவுகள் பொலிஸ் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் அவ்வாகனங்களின் சாரதிகளுக்கான மேலதிக நேரப் படி மற்றும் இணைந்த படி போன்ற கொடுப்பனவுகள் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.**

03. மேலும், பொலீஸாருக்குத் தேவையான வாகனங்களை பொலிஸ் மா அதிபரின் (பதில் கடமை) அங்கீகாரத்தின் கீழ் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு முடியுமென்பதோடு, வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான சுற்றறிக்கையில் (சுற்றறிக்கை இலக்கம் LAE/2025 - 42 ஐப் பார்க்கவும்.) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கமைய அவர்களுக்கு தனிப்பட்ட வாகனங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

04. <u>தேர்தலின்போது பொலீஸ் திணைக்களத்தின் தேவைப்பாடுகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்படுகின்ற தனியார் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அவற்றை அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டுமென்பதுடன், தேவைகளுக்கேற்ப தகுதியான வாகனங்களை பொலீஸ் திணைக்களத்தினால் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும்.</u>

தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் பொலிஸ் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டு அவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்று குறித்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினூடாக தேர்தல்கள் செயலகத்தின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளருக்கு (நிருவாகம்) அனுப்பி வைத்தல் வேண்டும். பொலீஸ் திணைக்களத்திற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த அறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

05. ஏதேனும் கடமைக்காக இலங்கை இராணுவத்தினரை அழைத்தால் அது பொலிஸ் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றமையால், இராணுவத்தினரின் தேவைப்பாடுகளுக்காக வழங்கப்படும் வாகனங்களுக்கான அனைத்து கொடுப்பனவுகளும் பொலிஸ் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,

**பிரதிகள் :-**

01. கணக்காய்வாளர் தலைமை அதிபதி - தயவுடன் தகவலுக்காக

02. அஞ்சல் மாஅதிபர், தபால் தலைமையகம் } அனைத்து பிராந்திய தபால் அத்தியட்சகர்கள் மற்றும் உரிய அலுவலர்களை அறிவுறுத்துவதற்காக

03. பொலிஸ் மா அதிபர் (பதில் கடமை) பொலிஸ் தலைமையகம் } தகவலுக்காக மற்றும் உரிய அலுவலர்களை அறிவுறுத்துவதற்காக

04. சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், (நிருவாகம்) - தயவுடன் தகவலுக்காக

05. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு – தயவுடன் தகவலுக்காக.

06. மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி) - தயவுடன் தகவலுக்காக.

07. தலைமை நிதி அலுவலர்.

08. தலைமை உள்ளகக் கணக்காய்வாளர்.

} - தயவுடன் தகவலுக்காக மற்றும் உரிய அலுவல்களுக்காக